1992 பிப்ரவரி 6]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொல்லியபடி நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சி தலைவி அவர்களுடைய அரசு வந்தவுடனே இதற்கான துரிதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இன்றைக்கு இந்தத் திட்டத்திற்கான விரிவான ஆய்வுப் பணிகளை தமிழ்நாடு மின் வாரியம் மேற்கொண்டுள்ளது. ஆய்வுப் பணிகள் முடிந்தவுடன் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் அனுமதிக்கு அனுப்பப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 74.

திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

74—

இராமநாதபுரம் மாவட்டத்தில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

*1117—திரு. வ. சத்தியமூர்த்தி:
மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பராமரிக்கப்பட்ட கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் சரிவர இயங்காததால், குடி தண்ணீர் வழங்கப்பெறவில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா ?

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் உள்ளடக்கப்பட்ட கிராமங்கள் ஏறக்குறைய 10–க்கு 9 கிராமங்களுக்கு குடிநீர் கொடுக்கப்படாத நிலை இருக்கிறது. ஆனால் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் அரசுக்கு கொடுக்கப்பட்ட புள்ளிவிவரத்தில் அந்த கிராமங்களுக்கு எல்லாம் குடிநீர் கொடுக்கப்பட்டு விட்டது என்று தகவல் வந்துள்ளது. ஆகவே கூட்டு குடிநீர்த் திட்டத்தின் மூலம் தண்ணீர் கொடுக்கமுடியாத நிலை ஏற்பட்ட கிராமங்களைப் பிரித்தெடுத்து புதிய திட்டம் வகுக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இதுபற்றி பரிசீலனை செய்து முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 75, டாக்டர் அ. ஸ்ரீதரன். மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

75—

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு கூட்டுறவு சிறப்பங்காடி.

*5789—டாக்டர் அ. ஸ்ரீதரன்:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மில் தொழிலாளர்களுக்கு கூட்டுறவு அங்காடி உள்ளது போல் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் கூட்டுறவு சிறப்பங்காடி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: (அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மில் தொழிலாளர்களுக்கு கூட்டுறவு சிறப்பங்காடி, சூப்பர் மார்க்கெட் இருப்பதைப் போல தேயிலைத்தோட்ட தொழிலாளர்களுக்கும் அமைக்கின்ற எண்ணம் இந்த அரசுக்கு உண்டு. அப்படி சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கத்திடம் இருந்து முறையான முன்மொழிவு வருமானால் அவைகளை தகுதி அடிப்படையிலே பரிசீலனை செய்து அரசு முடிவெடுக்கும்.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதாக சொன்னார். என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இப்படி அமைக்கப்படுகின்ற தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை தொழிலாளர்கள் உள்ளடக்கியதாக அந்த கூட்டுறவு சங்கம் அமையும், எவ்வளவு தூரங்களை உள்ளடக்கியதாக அமையும் என்பதை அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய சூப்பர் மார்க்கெட்டுகளை மாவட்ட அல்லது வட்ட அளவில் ஒல்சேல் ஸ்டோர்ஸ் தான் இந்த மொத்த விற்பனைப் பண்டக சாலைகளை நடத்தி வருகின்றன. பிரைமரி ஸ்டோர்ஸ் இப்படிப்பட்ட கூட்டுறவு சிறப்பங்காடிகளை நடத்துவதில்லை. ஆகவே, அப்படிப்பட்ட மொத்த விற்பனை பண்டக சாலைகள் முன்மொழிவு அனுப்பினால் அந்த விதிகளின் அடிப்படையிலே பரிசீலனை செய்யலாம்.